# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப. (ஓ).

* * * * * * * * * * * *

மனு எண்: 658/2017/ஊராட்சி

ஆணை எண்: 112 /2017

நாள்: 15/05/2017

மு. காளிராசு,
6/137, மேலத்தெரு, ஆத்திக்குளம் (Po.)
கோவில்பட்டி தாலுக்கா,
தூத்துக்குடி மாவட்டம் - மனுதாரர்

1. ஊராட்சி செயலாளர்,
   தெற்கு இலந்தகுளம் ஊராட்சி.
2. வட்டார வளர்ச்சி அலுவலர்,
   கயத்தாறு ஊராட்சி ஒன்றியம்
   கயத்தாறு. - எதிர் மனுதாரர்கள்

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு ஒன்றியம், தெற்கு இலந்தகுளம் ஊராட்சியில் வசிக்கும் திரு. மு. காளிராசு என்பவர், அவருடைய 8.5.2017 நாளிட்ட மனுவில் தெற்கு இலந்தகுளம் ஊராட்சியில் மே மாதம் 1-ந் தேதி வழக்கமாக நடைபெறும் கிராமசபை கூட்டம்" அன்றைய தேதியில் நடைபெறவில்லை என்றும், கிராம சபை கூட்டம் நடைபெறும், தங்களது குறைகளை மக்கள் சொல்லி, கிராம சபை கூட்டம் மூலம் நிவர்த்தி செய்து கொள்ளலாம் என்று பலர் எண்ணியிருந்தனர் என்றும், குடிப்பதற்கு கூட தண்ணீர் இல்லாமல் மிகவும் துயரப்படுகின்றனர் என்றும், ஆடு, மாடு போன்ற கால்நடைக்கு தண்ணீர் தீவனம் போன்றவை இல்லாமல் விவசாயி குறைந்த விலைக்கு அடிமாட்டுக்கு விற்று வருகின்றனர் என்றும், வேலை வாய்ப்புகள் இல்லாமல் கிராம மக்கள்

துயரத்தில் உள்ள நிலையில், கிராம சபை கூட்டம் நடைபெறாமல் தீர்மானம் நிறைவேற்றி உள்ளனர் என்றும், இதுபற்றி பஞ்சாயத்து கிளார்க்கிடம் கேட்டதற்கு முறையான பதில் இல்லையென்றும், தீர்மான நிறைவேற்றிய புத்தகத்தில் நூறு நாள் வேலை செய்யும் பணியாட்களிடம் கையொப்பம் பெற்றுக் கொள்கின்றனர் என்றும், இதுப் பற்றி BDO-விடம் தெரிவித்தாலும் சரியான பதில் இல்லையெனத் தெரிவித்து, கிராம சபை கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை ரத்து செய்து, வேறு ஒரு தேதியில் முறையான அறிவிப்பு செய்து கிராம சபை கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யுமாறு கோரியுள்ளனர்.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. இம்மனு தெற்கு இலந்தகுளம் ஊராட்சியை சார்ந்தது ஆகும். எனவே இம்மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு மே திங்கள் 15-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்
திரு. மு. காளிராசு,
6/137, மேலத்தெரு, ஆத்திக்குளம் (Po.)
கயத்தாறு (வழி), கோவில்பட்டி தாலுக்கா,
தூத்துக்குடி மாவட்டம் - 628 952.

நகல்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
தூத்துக்குடி மாவட்டம்,
தூத்துக்குடி.